RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s195

# கிறிஸ்தாயனம் உணர்த்தும் அறக் கோட்பாடுகள்

**ரா. சுஜிதா [அ, *], எட்வின் எழில் அரசி [அ]**

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்-629004, தமிழ்நாடு, இந்தியா

# Moral Principles that Christianity Implies

**R. Sujitha [a, *], Edwin Ezhil Arasi [a]**

[a] Department of Tamil, Scott Christian College, (Autonomus), Nagercoil-629004, Tamil Nadu, India

* Corresponding Author:
www.rajsujiraj@gmail.com

Received: 26-07-2022
Revised: 29-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

The Ancient sages regarded charity as the way of life and cherished it. Charity is regarded as a set of rules of morality. It can be said that virtue gradually cultivates man. It was the belief of the ancients that virtue gives creativity and encouragement to achieve the goal of human life, 'Salvation'. The ethical principles of such a belief are found in John Palmer's Christianity. The literature reveals that charity is rooted all over the world. From Sangam literature to modern literature, it speaks of charity. Charity is the foremost of all things. It is deeply ingrained in everyone's heart. Whether realize it or not, they do not follow. He who realizes it grasps it and seeks the truth. He does the real thing He feels the conscious one clings to charity. Charity is static and can be established everywhere, reflecting morality in a rational man It is a virtue that motivates one to think, such as the expression of impermanence. Charity is the standard way. Scholars have compiled many wonderful kinds of literature on ethics. They are the crutches that give birth to extensive and sustainable ways among human beings today. Charity highlights ethical considerations. Ethical ideas reflect, speak and bring out the sustainable lives of people. It makes people aware of the unstable world and leads to salvation. This article deals with doing good work as a moral principle, emphasizing charity, expressing gratitude, conveying impermanence, and loving. In literature, the flow of life is moral ideas. There is a lot of literature that is rich in ethical ideas. From the Sangam period to modern literature, many things are highlighted about the virtues to be followed by human beings in life. Thus, it reveals the moral principles laid down in the epic literature of Christianity.

**Keywords:** Christianity, Implies, Moral Principles, Literature

## முன்னுரை

தமிழ்நாட்டிலுள்ள கிறிஸ்தவக் கவிஞரால் எழுதப்பட்டு முதன் முதலாக வெளிவந்த காப்பியம் 'கிறிஸ்தாயனம்' ஆகும். இராமபிரானின் வரலாற்றை விவரிக்கும் காப்பியத்திற்கு இராமாயணம் எனப்பெயர் சூட்டியது போன்று இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதனால் இந் நூலுக்கு கிறிஸ்தாயனம் எனப் பெயரிட்டுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜான் பால்மர் 1865 ஆம் ஆண்டு கிறிஸ்தாயனத்தை எழுதி வெளியிட்டார். ஜான் பால்மர் ஏராளமான கீர்த்தனைகளையும், கிறிஸ்தவச் சிற்றிலக்கியங்களையும் படைத்திருந்ததன் மூலம் இந்நூல் மிகுந்த சிறப்புடையதாகத் திகழ்ந்தது. கிறிஸ்தாயனம் பாயிரம், தெய்வ வணக்கம், நூல்" வரலாறு எனும் பகுதிகளுடன் தொடங்குகிறது. தெய்வ வணக்கம் எனும் பகுதியில் பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனும் திரியேகக் கடவுளைத் தனித்தனிப் பாடல்களின் மூலம் வணங்குகிறார். இக்காப்பியம் பாலகாண்டம், கிரியா

காண்டம், அவஸ்தா காண்டம் எனும் நான்கு காண்டங்களைக் கொண்டு 842 விருத்தப்பாக்களால் ஆனது. ஒவ்வொரு காண்டமும் பல்வேறு உட்தலைப்புகளைக் கொண்டது. அவ்வாறு அமையும் கிறிஸ்தாயனம் நூலில் காணப்படுகின்ற அறக் கோட்பாடுகளைக் கூறுவதாய் இக்கட்டுரை அமைகின்றது (John Palmer, 1865).

## நற்கிரியை செய்ய வலியுறுத்தல்

நற்கிரியை செய்தல் என்பது ஒரு மனிதர் இன்னொரு மனிதருக்குச் செய்கின்ற நல்ல செயல்களே நன்மை செய்தல் எனப் பொருள்படும். அறிவினாலும், மனத்தினாலும், செயல்பாடுகளாலும் பிறர் நலனுக்காக அவர்களது தகுதியையும், சாதிவர்க்கத்தையும் பாராமல் நன்மை செய்தல் வேண்டும். இதனையே விவிலியம் "அதற்கு ராஜா பிரதியுத்தரமாக, மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் செல்லுகிறேன்" என்று விவிலியம் கூறுகிறது (John Palmer, 1865). நன்மை செய்தல் குறித்து வள்ளுவர் குறிப்படுகிறதாவது,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என்ஆற்றுங் கொல்லோ உலகு"

கைம்மாறு கருதாமல் நன்மை செய்தல் வேண்டும் என்பதை குறள் வலியுறுத்தி நிற்கிறது. கிறிஸ்தாயனம் நூலின் ஆசிரியர் நல்ல காரியங்களை செய்ய வலியுறுத்துகின்றார் (Puliyur Kesikan, 2008).

"நீங்களும் மனதைத் திருத்திநற்கிரியை நிகழ்த்தும் ஈரங்கிகளுடையோன்

ஆங்கனவயற்றோர்க் களித்துணவுடையோன் அங்ஙனம் ஈக வென்றோதி

தாங்கள் என்புரிய வேண்டுமென்றறியச் சார்ந்த ஆயத்துறை யோர்க்கு

பாங்கறக்கிரமமீறி நீர்தாம் பாலாட்டியஞ் செயத்தகா தென்றான்"

மனதை நல்ல மனம் உடையதாக மாற்றி பிறர்க்கு நன்மை செய்தலை உடைய நல்ல செயலை கடைபிடிக்க வலியுறுத்துவதாக அமைகின்றது (John Palmer, 1865).

## அறம் வலியுறத்தல்

அறம் என்ற சொல் விரிந்த பொருளை உடையது. மனிதன் செய்கின்ற நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கலாம். அறம் என்கின்ற சொல்லானது நீதியைக் குறிக்கின்றது. அறமானது இடத்திற்கு ஏற்றபடி பல பொருட்களில் வழங்கப்படுகிறது. இதன் கருத்துப்பொருள் பல வகைகளில் இருந்தாலும் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ள அதன் சொற்பொருள் அற்றது என்பதாகும். அது பற்றற்றநிலை, நன்மை என்றும் நேர்மை என்றும் குணம் என்றும் கடமை என்றும் பலவாறு கருதிக் கொள்ளலாம். அறச்செயலில் ஒருவன் நன்கு சிறந்து விளங்குபவன் என்றால் அவன் நல்லவன் என்றும் சான்றோன் என்றும் போற்றப்படுகிறான். ஒரு மனிதன் அறச்செயல் உடையவனாக இருக்க வேண்டும். அறமானது ஒருவன் மனிதனாக இருப்பதற்கு முற்றிலும் இன்றியமையாததாகிறது. அறத்தின் சிறப்பினையும் அறத்தைக் கைவிடுவதால் ஏற்படுகின்ற கெடுதியையும் வள்ளுவர் குறிப்பிடும் போது

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை

மறத்தலின் ஊங்கில்லை கேடு"

என்கின்றார் (Puliyur Kesikan, 2008). அதாவது ஒரு மனிதனுக்கு அறம் செய்வதைவிட மேலான நன்மை தருவது வேறு ஒன்றுமில்லை. அறத்தைச் செய்யாமல் கைவிடுவதைவிட மேலான கேடும் வேறு ஒன்றும் இல்லை என்று கூறுகிறார். அறம் குறித்து கிறிஸ்தாயனம் கூறும்போது,

"தருமமானது தான் புரியாயதைப்

பெருமையாக வலப் பிறர் போற்றிட

ஒருகரஞ்செய்வதை மற்றொருகரம்

தெரிதலின்றியே செய்வது தானறம்"

ஒருவருக்கு நன்மை செய்வதை, யாரும் அறியாமல் செய்வதுதான் அறம் என கிறிஸ்தாயனம் குறிப்பிடுகின்றது. அறச்செயல்கள் ஓங்கி நிற்கும் போது தான் நாடு நன்கு வளம் பெறும். வளத்தைப் பெருக்குகின்ற அறம் என்றும் நிலைக்க வேண்டும் (John Palmer, 1865).

## நன்றியுணர்வு

நன்றியுணர்வு ஒருவனிடம் இருந்தால் சுற்றமும் அவனை நினைக்கும். நன்றியுணர்வோடு இருக்கும் போதுதான் மனம் பக்குவப்பட்ட நிலையில் பணிவோடும் தெளிவோடும் இருக்கும். நன்றியுணர்வு தான் என்ற அகந்தை நீங்கிய நிலையில் நாம் என்ற எண்ணங்கள் தெளிந்த நீரூற்றாக ஊற்றெடுக்கத் தொடங்குகிறது. 'நன்றி மறப்பது நன்றன்று' என்கிறார் வள்ளுவர்.

சலுகைகளைப் பெற்ற ஒருவர் மற்றொருவருக்கு நன்றி தெரிவிக்கும் பண்பே நன்றி உணர்வாகும். நாம் பிறரிடமிருந்து பெறுகின்ற சின்னஞ்சிறு பணிவிடைகள் நம்மை நன்றியுணர்வு உள்ளவர்களாக மாற்றுகின்றது. இறைவனிடமிருந்தும், குடும்பத்தினரிடமிருந்தும், நாட்டிடமிருந்தும் பெறும் பயன்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்குமாறு நன்றியுணர்வு நம்மைத் தூண்டுகிறது. நன்றியுணர்வுத் தானாக உரிமை எடுத்துக் கொள்வதில்லை. அது என்றும் தன்னலமுடையது அல்ல பிறருடைய உணர்வுகளை மதிக்கும் உணர்ச்சி உடையது. விவிலியம் நன்றியுணர்வு குறித்து கூறும் போது" அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரக்கச் சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தினான்" (John Palmer, 1865). என்றும், திருவள்ளுவர் திருக்குறளில் நன்றியுணர்வு குறித்துக் கூறியுள்ள கருத்தாவது,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

ஒருவன் செய்த உதவியை மறந்த, நன்றியுணர்வு இல்லாதவனுக்குப் பாவத்திலிருந்து தப்பும் வழி இல்லை என்று வள்ளுவம் கூறுகிறது. கிறிஸ்தாயனம் நூலிலும் நன்றியுணர்வு கூறப்பட்டுள்ளது (Puliyur Kesikan, 2008).

"நேர்ந்தவர் ஆசிரியருக்கு நீருமைக்காட்டிடுக, என்ன நேரதாக

பேர்ந்து செலும் வழியிலவர் பெற்றனர் நற்சுகம், அவரில் பிரீதியாகச்

சார்ந்த சுகந்தனையுணர்ந்த சமரியன்தான் நன்றியொடுதான் திரும்பிச்

சேர்ந்தவர்தாளதில் வீழ்ந்து தொண்டனிட்டு மாதுதிகள் செலுத்தி னானே"

இப்பாடலில் நற்சுகம் பெற்ற பலரில் ஒருவன் மட்டுமே நன்றியுணர்வுடன் கடவுளுக்கு நன்றியைச் செலுத்துகின்றான். 10 பேர் குணம் அடைந்ததில் ஒருவன் மட்டும் நன்றியுணர்வுடன் காணப்பட்டான். மற்றவர்கள் நன்றியுணர்வைக் காட்டவில்லை. உலகில் இப்பொழுதும் மனிதர்கள் இதைப்போன்றுதான் இருக்கிறார்கள். ஒன்றோ இரண்டோ என கை காட்டுகின்ற எண்ணிக்கையில் நன்றியுணர்வு உள்ளவர்கள் இருக்கிறார்கள் மற்றவர்கள் அந்த நன்றியை உடனே மறந்து விடுகிறார்கள் (John Palmer, 1865).

## நிலையில்லாமை

மனிதனுக்கு இந்த உலகில் நிலையானது என ஒன்றும் இல்லை. எத்தகைய செல்வந்தராக இருந்தாலும் ஒருநாள் அவைகள் தம்மிடம் இருந்து அகன்று போகும். ஒரு பாதையில் செல்கின்றவன்

அந்த பாதையின் தன்மையினை அறிந்து கொண்டு சென்றால் அவனுக்குக் கலக்கம் தயக்கம் இல்லாமல் சென்றடைய முடியும். அதுபோல மனிதனுடைய உடலும், இளமைத்தன்மையும், செல்வமும் என இவைகள் நிலையற்றது என உணர்ந்து கொண்டால் வாழ்வில் மனிதன் அஞ்சத் தேவையில்லை. உலக வாழ்வில் நிலைபெற்றது என்று சொல்ல ஒன்றும் இல்லை. நாலடியார் மூவகை நிலையாமை குறித்து கூறுகிறது. அதாவது செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை குறித்து வள்ளுவர் கூறும்போது,

"நெருநல் உளன் ஒருவன் இன்றுஇல்லை என்னும்

பெருமை உடைத்துஇவ் வுலகு"

ஒருவன் நேற்று உயிரோடு இருந்தான், இன்று மறைந்தான் என்று சொல்லும் நிலையற்ற தன்மையை உடையது இவ்வுலகம் என்று குறிப்பிட்டுள்ளார் (Puliyur Kesikan, 2008). கிறிஸ்தாயனம் நூலின் ஆசிரியர் நிலையில்லாமையை,

"உலகம் யாவையும் ஒருவனுற் றடைந்திருந் தாலும்

நிலையில் லாதுதன் நேச ஆன்மா கெடவிட்டால்

பலனங் கேதவன் பாழ்த்ததன் உயிர்தனை மீட்க

நலமதாய் எதை நல்கிடு வான்புக லிலையே"

ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயம் செய்து கொண்டாலும் அவனுடைய ஆன்மாவாகிய உள்ளம் கெட்டதாய் இருக்குமானால் எந்த பயனும் இல்லை. உலகத்தை ஆதாயம் செய்தல் நிலையானது அல்ல. மனிதனின் ஆன்மாவே நிலையானது என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன (John Palmer, 1865).

## அன்பு செய்தல்

அன்பு என்னும் மூன்று எழுத்தை உடைய குணம் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆழ்ந்து கிடக்க வேண்டிய ஒன்றாகும். ஒருவன் மற்றவனிடம் அன்பு காட்டும்போது தான் அம்மனிதனுக்கும் வேறு ஒருவனால் அன்பு கிடைக்கும். அன்பு மனித இனத்தை நெறிப்படுத்துகின்ற ஒன்று. அன்பு கள்ளம் கபடம் இல்லாத அன்பாக இருக்க வேண்டும். அன்பு தன்னுடைய நறுமணத்தை மற்றவர்களுக்குப் பரப்புவதற்கு விரைந்து செல்கிறது. ஒருவருக்கொருவர் மதிப்புடனும் மரியாதையுடனும் பழகும் மனிதர்கள், குழுக்கள், சங்கங்கள் ஆகியவர்கள் மத்தியில் அன்பு துளிர்விட்டு வளர்கிறது. மகிழ்ச்சியையும் வலிமையையும் தருகின்ற உறவு முறையை அன்பு மேம்படுத்துகிறது. உண்மையான அன்பிற்கு அச்சம் என்பது இல்லை. அன்பு உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. அன்பில் பல நல்ல பண்புகள் ஒழிந்திருக்கின்றன. இன்பம், அமைதி, பொறுமை, கனிவு, நன்மை, பற்றுறுதி, எளிமை ஆகியவை அன்பில் நிலைத்திருப்

பவையாகும். இக்கருத்தை திருவிவிலியம் குறிப்பிடும் போது" எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள் அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று விவிலியம் கூறுகின்றது (John Palmer, 1865). அன்பு குறித்து திருக்குறளும் கருத்தைப் புலப்படுத்துகின்றது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கண்நீர் பூசல் தரும்"

அன்புடையவரின் துன்பத்தைப் பார்க்கின்ற மற்றவர் சிந்துகின்ற கண்ணீரானது உள்ளத்தில் இருக்கும் அன்பை அனைவருக்கும் வெளிப்படுத்தும். அன்புக்கும் அதை ஒழித்து வைக்கத் தாழ்ப்பாள் இல்லை எனக் குறள் கூறுகின்றது (Puliyur Kesikan, 2008). கிறிஸ்தாயனம் நூலின் ஆசிரியர் அன்பு கூறுதல் குறித்துக் குறிப்பிடும்போது.

"நாடி நான் உங்கள் மீது நண்பதாயிருந்தாற்போல நீர்

கூடியும் முள்ளே அன்பு கூர்ந்திரும் என மொழிந்தார்”

இயேசு கிறிஸ்து அன்பாய் இருந்தது போல நாமும் ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது (John Palmer, 1865).

## முடிவுரை

அறம் வலியுறுத்தும் இலக்கியங்கள் பல உள்ளன. அவை மனிதர்கள் வீடுபேற்றை அடைவதற்கு வழிகாட்டுபவையாக காணப்படுகின்றது. அறக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுவதால்தான் மக்கள் மனதில் வீடுபேறு என்ற எண்ணம் நிழலாடுகின்றது. உலகில் நிலையானது எதுவும் இல்லை. அறம் கடைபிடிக்கப்படும் போதுதான் நிலையான வீடுபேறு கிடைக்கும், என்று அறக்கோட்பாடுகள் பலவும் கூறுகின்றன. அவ்வகையில் கிறிஸ்தாயனம் நூலில் அமையப்பெற்றுள்ள அறக்கோட்பாடுகளைக் குறித்து இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. அறம் காலத்தினால் அழிக்க முடியாத ஒன்று. கிறிஸ்தவ காப்பியங்களும் அறத்தினைக் கூறும் காலப்பெட்டகமாக உள்ளது என்பதை இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

## References

John Palmer, (1865) Kirsthayanam, Asiavil Niruvanam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Thirukkural Thelivurai, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License